TENNECO CLEAN AIR INDIA LIMITED
(formerly known as Tenneco Clean Air India Private Limited)
CIN: L29308TN2018FLC126510
Telephone: +2135 612501/506
Email: Tennecoindiainfo@tenneco.com
Website: www.tennecoindia.com

Date: August 7, 2026

To
National Stock Exchange of India Limited
Exchange Plaza, C-1, Block G
Bandra Kurla Complex,
Bandra (E), Mumbai – 400051
Scrip Symbol: TENNIND

To
BSE Limited
Phiroze Jeejeebhoy Towers
Dalal Street,
Mumbai – 400001
Scrip Code: 544612

Sub: Newspaper publication of unaudited financial results for the quarter ended June 30, 2026

Dear Sir/Madam,

Pursuant to Regulation 30 and 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed copies of newspaper publication of the unaudited financial results for the quarter ended June 30, 2026, published in:

1. The Financial Express; and
2. Makkal Kural

Further, the above publication is also being made available on the Company's website at: https://tennecoindia.com/investor-relations/.

You are requested to kindly take the same on record.

Sincerely,
For **Tenneco Clean Air India Limited**

ROOPALI SINGH
Digitally signed by ROOPALI SINGH
Date: 2026.08.07 13:14:32 +05'30'

Roopali Singh
Company Secretary and Compliance Officer
Membership No: A15006

Place: Gurugram

Encl: as above

கோதாவரி–காவிரி–குண்டாறு இணைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும்: பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் விஜய் கடிதம்

சென்னை, ஆக.7

கோதாவரி காவிரி குண்டாறு இணைப்புத் திட்டத்தை விரைவாக செயல்படுத்த வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு முதல்அமைச்சர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

பிரதமர் மோடிக்கு முதல்அமைச்சர் விஜய் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு மாநிலம் இயல்பாகவே மேற்பரப்பு நீர் வளங்களில் பற்றாக்குறை கொண்டதாக இருக்கிறது. மாநில நீர்த்தேவைகளில் 30 சதவீதத்துக்கும் அதிகமான அளவுக்கு அண்டை மாநிலங்களைச் சார்ந்தே உள்ளது. மாநில அரசால் தொடர்ச்சியான ஒழுங்கு முறை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும், நிலத்தடி நீர் வளமும் கவலைக்கிடமான நிலையில் இருக்கிறது.

எனவே, தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர் வளங்களை பெருக்குவதற்கான மிக முக்கியமான நீண்டகால வாய்ப்பாக கோதாவரி–காவிரி–குண்டாறு இணைப்புத்திட்டம் திகழ்கிறது.

தமிழ்நாட்டு மக்களின்குடிநீர்மற்றும் பாசனத்திற்கான அதிகரித்து வரும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு இத்திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.மேலும், தமிழ்நாட்டில் குறிப்பாக தென் மாவட்டங்களான, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகியவை தொடர்ந்து கடுமையான நீர்ப்பற்றாக்குறையுடனும், வறட்சியாலும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறது.

இந்த மாவட்டங்களில் அதிகரித்து வரும் நீர்த்தேவைகளை பூர்த்தி செய்வதற்கான மிகச்சிறந்த நிரந்தரமான தீர்வாக கோதாவரி காவிரி–வைகை–குண்டாறு இணைப்பு திட்டத்தை செயல்படுத்துவது அவசியமாகிறது.

இந்த திட்டத்தால் வெள்ள உபரிநீரை நீர்ப்பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு திருப்பிவிட வழிவகுப்பதாய் அமையும். இப்பெரிய திட்டத்தின் முதற்கட்டமாக, தேசிய நீர் மேம்பாட்டு முகமை கோதாவரி, பெண்ணாறு, பாலாறு, வெள்ளாறு இணைப்பு திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்துள்ளது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கோதாவரி–காவிரி–குண்டாறு நதிகள் இணைப்பு திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

ஆகவே, தேசிய நலனை கருத்தில் கொண்டு, ஆக்கப்பூர்வமான கலந்தாலோசனை மற்றும் கூட்டுறவு கூட்டாட்சித் தத்துவத்தின் மூலம் மாநிலங்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளை தீர்த்து இத்திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதில் நான் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இத்திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதால் தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரபிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் மக்களுக்கும், விவசாயிகளுக்கும் மிகவும் பயனளிக்கும்.

தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தை விரைவாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுத்துவதற்கு தேவையான முழு அர்ப்பணிப்புடன் அனைத்து ஒத்துழைப்பும் வழங்க தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது.

எனவே, மத்திய ஜல்சக்தி அமைச்சகத்துக்கும், தேசிய நீர் மேம்பாட்டு முகமைக்கும் பின்வரும் உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும். தொடர்புடைய பயன்பெறும் மாநிலங்களுடன் ஆலோசனைகளை விரைவுபடுத்தி, நிலுவையில் உள்ள பிரச்சினைகளின் விரைவான உடன்பாட்டை ஏற்படுத்த வேண்டும், காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள கட்டளைக் கதவணை வரை இந்த இணைப்பை நீட்டிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை இறுதி செய்ய வேண்டும்.

இத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக விரைவான முறையில் அமல்படுத்த நடவடிக்கை எடுத்தல் மற்றும் இத்திட்டத்தை ஒருங்கிணைந்த மற்றும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செயல்படுத்திட ஒரு சிறப்பு நோக்கு அமைப்பினை நிறுவுவது குறித்து பரிசீலிப்பது. இத்திட்டத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக அறிவித்தல்.

எனவே நீங்கள் (பிரதமர்) இந்த திட்டத்தில் தனிப்பட்ட கவனம் செலுத்தி, தென்னிந்தியாவின் நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு நீண்டகால நீர்த்தேவையை பூர்த்தி செய்வதற்கும், நமது சிறப்பான நீர் வளங்களை சமமாகவும் நிலையான முறையிலும் பயன்படுத்துவது என்ற தேசிய குறிக்கோளை முன்னோக்கி எடுத்துச்செல்வதற்கும் கணிசமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

‘அக்னி–4’ ஏவுகணை சோதனை வெற்றி

ஒடிஷா, ஆக.7–

ஒடிஷா மாநிலம் சந்திப்பூரில் இருந்து ‘அக்னி–4’ ஏவுகணை சோதனை நேற்று வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

அக்னி வரிசை ஏவுகணைகள் உருவாக்கப்பட்டு அவற்றின் செயல்திறன் மற்றும் செயல்பாட்டு தயார் நிலையை உறுதி செய்வதற்காக, அவ்வப்போது பரிசோதிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், அணு ஆயுதங்களை சுமந்து சென்று எதிரிகளின் இலக்குகளை துல்லியமாக தாக்கும் திறன் படைத்த ‘அக்னி 4’ ஏவுகணை நேற்று சோதனை செய்யப்பட்டது. இரண்டு கட்ட திட எரிபொருள் உந்துவிசை அமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணை, முந்தைய அக்னி வகைகளை விட எடை குறைவானது. சாலை வழியாக எடுத்துச் செல்லக்கூடியதுடன், தேவையான நேரத்தில் விரைவாக களமிறக்கும் வசதியும் கொண்டது. இதில், அனைத்து தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டு அம்சங்கள் வெற்றிகரமாக உறுதி செய்யப்பட்டது’ என ராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.